பக்கங்கள்: 08


# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 30 செவ்வாய்க்கிழமை 16.08.2022 கதிர் 172

## பிரிட்டன் பெண்ணின் 'ரிட்' மனு நிராகரிப்பு



தம்மை நாடு கடத்தும் உத்தரவை இரத்துச்செய்ய உத்தரவிடக் கோரி பிரிட்டன் பெண் கெய்லி பிரேசர் தாக்கல் செய்த ரிட் மனுவைமேன்முறையீட்டு நீதிமன்றம் 2

# சர்ச்சைக்குரிய 'யுவான் வாங் 5' கப்பல் அம்பாந்தோட்டைத்துறைமுகத்துக்குள்

## 22 வரை தரித்து நிற்கும் என்று சீனத் தரப்பு அறிவிப்பு



இலங்கை - இந்திய உறவில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சிக் கப்பலான 'யுவான் வாங் 5' இன்று காலை 7.50 மணியளவில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பல் கடந்த 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவிருந்தது. எனினும், தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்தியா கடுமையான கண்டனங்களை வெளியிட்டிருந்த நிலையில் அதன் வருகை தாமதமானது. 2

## அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம்

இரத்மலானைக் கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது. 2

## தையல் கடைக்குள் புகுந்து வாள்வெட்டு

### – உரிமையாளர் படுகாயம்

யாழ்., பருத்தித்துறைநகரில் உள்ளதையலகத்தினுள்புகுந்த முகமூடி அணிந்த நபர்கள் தையலகத்தை அடித்து உடைத்ததுடன் அதன் உரிமையாளரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்றிரவு 7:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 2

# இந்து சமுத்திரத்தின் அமைதி இலங்கையின் கைகளிலேயே

## 'யுவான் வாங் 5' கப்பல் வரவேற்பு நிகழ்வில் விமல் எம்.பி. தெரிவிப்பு



இலங்கை சீர்குலைந்தால் இந்து சமுத்திரத்தில் அமைதியின்மை ஏற்படும். ஸ்திரமின்மை நிலை கொள்ளும். இந்த நிலைமை ஏற்படாமல் எம்மால் முன்னேறிச் செல்ல முடியும் என நாம் நம்புகின்றோம்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார். 2

## நாயைக் கொடூரமாக கொலைசெய்தவருக்கு 29 வரை விளக்கமறியல்

யாழ்., புங்குடுதீவில் நாய் ஒன்றைக் கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்த பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்தார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நாய் ஒன்றை கைக்கோடரியால் வெட்டிக் கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது. 2

## இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு: சீனா துணைபோகவே இல்லை

### - போற்றிப் புகழ்ந்தார் விமல்

இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் துணை போகவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு இன்று காலை வருகை தந்துள்ள சீன இராணுவத்தின் 'யுவான் வாங் 5' கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாஎம்முடன்நீண்டகாலமாகநட்புறவைக்கொண்டுள்ளது. நாம் பொருளாதார ரீதியில் விழுந்துள்ள சந்தர்ப்பங்களிலும் எமக்குக் கைகொடுக்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும்.

நாம் எதனைச் செய்ய வேண்டும் என்று 2

## சர்வதேசத்தை ஏமாற்றவே நாடகமாடுகின்றார் ரணில்

### புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் குறித்து பொன்சேகா கருத்து



தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனி நபர்களும் சேர்க்கப்பட்டனர்.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தாமல், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும், ஜெனிவா மாநாட்டைச் சமாளிக்கவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடை நீக்கம் என்ற இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அவரின் இந்த ஏமாற்று நாடகத்துக்கு சர்வதேசமும் பலியாகப்போகின்றது.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் 2

# தடை நீக்கம் முதலீடுகளை இலக்காகக் கொண்டதல்ல

## - அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல விளக்கம்



வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்து, சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதானதடையை இலங்கை அரசு நீக்கவில்லை.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், முதலீடுகளைப் பெறவே சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான 2

## யாழ். பல்கலை மாணவிகளுடன் மர்மநபர் ஆபாசமாக உரையாடல்

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவிகளுக்குத் தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆபாசமாக உரையாடும் இனந்தெரியாத நபர் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

0742345913 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து அண்மையில் அழைப்பு மேற்கொண்டு ஆபாசமான முறையில் பேசினார் என்று மாணவிகளின்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்து சமுத்திரத்தின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டைத்துறைமுகத்துக்கு இன்று காலை வருகை தந்துள்ள சீன இராணுவத்தின் 'யுவான் வாங் 5' கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

எமது கடல், வான்வெளியே எம்மை ஏனைய நாடுகளுடன் இணைக்கின்றது. அவற்றில் இறையாண்மை அடிப்படையில் எமக்குச் சில உரிமைகள் உள்ளன. ஒரு நாடு என்ற வகையில் அதனைப் பேண வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

இந்து சமுத்திரத்தில் அமைதி நிலவ வேண்டும். இந்து சமுத்திரம் போர்க்களமாகவோ, எதிரிகளின் கூடாரமாகவோ மாறிவிடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

நாம் பொருளாதார ரீதியில் பலமாகவோ, பலவீனமாகவோ இருந்தாலும் இந்து சமுத்திரத்தை நாம் பாதுகாத்தே தீர வேண்டும்.

சிலர் இதனை உளவுக் கப்பல் என்றனர். நாம் இதனைத் தொழில்நுட்பக் கப்பல் என்கின்றோம். கப்பலுக்கு இலங்கை வர அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எம்மில் சிலர் இருந்தோம் - என்றார்.

## சர்ச்சைக்குரிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரம் குறித்து மேலும் ஆலோசனைகள் நடத்தப்படும் வரை பயணத்தை ஒத்திவைக்குமாறு சீனாவிடம் இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

எவ்வாறாயினும், குறித்த கப்பல் சீனாவிலிருந்து, பயணத்தை ஆரம்பித்து 24 நாட்களின் பின்னரே, அதாவது இலங்கையை வந்தடைவதற்கு மூன்று நாட்கள் இருந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த 11 ஆம் திகதி வரவிருந்த குறித்த கப்பலின் வருகை தாமதமானது. எவ்வாறாயினும், குறித்த கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருவதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கடந்த 13 ஆம் திகதி அனுமதி வழங்கியது.

தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காகக் குறித்த கப்பல் இலங்கைக்குப் பிரவேசித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் எதிர் வரும் 22ஆம் திகதி பிற்பகல் இலங் கையில் இருந்து வெளியேறவுள்ளது என்று குறித்த கப்பல் நிறுவனம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்துள்ளது.

சீனாவின் 'யுவான் வாங் 5' என்ற கப்பல் அந்நாட்டின் ஆராய்ச்சி மற்றும் ஆய்வு வகைக் கப்பலின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தது.

இந்த வகையான ஏழு கப்பல்களை சீனா கொண்டிருக்கின்றது. இந்தக் கப்பலானது, சீனாவின் ஜியாங்னான் கப்பல் கட்டுமானத் தளத்தில் கட்டப்பட்டு 2007 செப்டெம்பரில் சேவையில் இணைக்கப்பட்டது.

இந்தக் கப்பலை சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் உத்தி ஆதரவுப் படை ஆகியன கூட்டிணைந்து இயக்குகின்றன.

இந்த வகைக் கப்பல்களை செயற்கைக்கோள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவுதல், தகவல்தொடர்பாடல், மின்னணு வலையமைப்பு ஆகிய செயற்பாடுகளைக் கண்காணிக்கப் பயன்படுத்துகின்றது.

இறுதியாக, 'யுவான் வாங் 5' கப்பலானது, சீனாவின் 'லாங் மார்ச் 5 பி' ஏவுகணை விண்வெளிக்கு ஏவப்பட்டபோது ஆய்வகத்தொகுதி மற்றும் கடற்பரப்பினைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, வேறு தொலைபேசி இலக்கங்களிலிருந்தும் தொடர்ச்சியாக இவ்வாறான அழைப்புக்கள் பல்கலைக்கழக மாணவிகளுக்கு வருகின்றன எனவும், அவர்கள் மிரட்டப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் உரிய முறையில் கவனம் செலுத்தவில்லை என்று மாணவிகள் தரப்பில் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளும் சூழல் உருவானது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## தடை நீக்கம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை நீக்கப்பட்டது எனக் கூறுவது சிலரின் தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம்.

1968 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டவிதிகளுக்கமைய, பாதுகாப்பு அமைச்சால் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதம் அல்லாத அமைப்புக்கள் மீதான தடை அல்லது தடைநீக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது.

அண்மைய காலங்களில் குறித்த அமைப்புக்களின் நடவடிக்கை தொடர்பாகத் தொடர்ச்சியான தீவிர கண்காணிப்பின் பின்னரே இந்தத் தடை நீக்கப்பட்டது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைகளுக்கு அமையவே இந்தத் தடை நீக்கப்பட்டது - என்றார்.

## பிரிட்டன் பெண்ணின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நிராகரித்துள்ளது. மருத்துவ விசாவில் இலங்கை வந்த நிலையில், காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்து காணொளி வெளியிட்ட கெய்லி பிரேசர் என்ற பிரிட்டன் பெண்ணின் விசாவை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் இரத்துச் செய்ததுடன், இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், தம்மை நாடு கடத்துவதற்கு எதிரான தீர்மானத்தை இரத்துச் செய்ய உத்தரவிடுமாறு கோரி இந்த மனுவை குறித்த பிரிட்டன் பெண் தாக்கல் செய்திருந்தார்.

## தையல் கடைக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சாரம் தடைப்பட்டதைச் சாதகமாகப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த நபர்கள் இந்த வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ச.பாலகுமார் (வயது 44) என்ற உரிமையாளர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று தெரிவித்துள்ள பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களில் 10 இற்கும் மேற்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்மலானைப்பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாயைக் கொடூரமாக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் இந்த மாத ஆரம்பத்தில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்திய கைக்கோடரி மற்றும் அதனைக் காணொளி எடுத்த அலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுக்களில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குலைத்துக் காட்டிக்கொடுத்துவிடும். இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுக்களுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால்தான் அந்த நாயை வெட்டிக் கொலை செய்தோம். கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்தவர் அன்றைய தினம் போதையில் இருந்தார். சில நாட்களுக்கு முன்பாகவே நாயைக் கொலை செய்துவிட்டோம். அதன் காணொளி சகோதரனின் அலைபேசியில் இருந்தது. அந்தக் காணொளி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது - என்று காணொளியைப் பதிவெடுத்தவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சந்தேகநபர்களைச் சட்ட மருத்துவரின் முன் முற்படுத்தி அறிக்கை பெற்ற பின் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தநிலையில், பிரதான சந்தேகநபர் கிளிநொச்சியில் தலைமறைவாகியிருக்கின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேகநபர் நேற்று திங்கட்கிழமை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவர் மிருகவதைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணை வழங்க மறுத்த மன்று 14 நாட்களுக்குச் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த கொடூரச் சம்பவம் சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்திய நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் உத்தரவில் நாயைக் கொலை செய்தவர் மற்றும் உடந்தையாக இருந்தோர் மீது மிருகவதைச் சட்டத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## சர்வதேசத்தை ஏமாற்றவே...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரை ஏமாற்றி பிரதமர் பதவியை சுவீகரித்து பின்னர் ஜனாதிபதியாகிய ரணில், முழு நாடாளுமன்றத்தையும் ஏமாற்றி, நாட்டு மக்களையும் முட்டாளாக்கி இன்று சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார். தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனிநபர்களும் சேர்க்கப்பட்டனர். இந்தநிலையில் யார் மூலம் காய்களை நகர்த்தி சர்வதேசத்தை ஏமாற்ற முடியுமோ அந்த அமைப்புக்களையும் குறிப்பிட்ட நபர்கள் மீதான தடையையும் ஜனாதிபதி நீக்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் நாட்டின் அரச தலைவர் என்ற ரீதியிலும் இது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் விரிவான விளக்கத்தை அவர் வழங்க வேண்டும் - என்றார்.

## இலங்கையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு ஒருபோதும் சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் துணைபோகவில்லை.

இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை கொண்டுள்ளது. இந்த நிலைமையில் கடன்களை விட முதலீடுகளையே இலங்கை எதிர்பார்க்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடன்களைவிட முதலீடுகளால் சீனா எமக்கு அதிகம் உதவும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீளவே விடாது பேரினவாதம்!

சில தரப்புகளின் பரவணிக் குணங்கள் மாற்றவே முடியாதவை. 'பத்தையில் (பற்றையில்) இருந்ததை மெத்தையில் தூக்கி வைத்தால் அது பத்தைக்கு மீளத்தான் துடிக்கும்'. அத்தகையது பரவணிப் பண்பியல்பு.

இதற்கு பௌத்த, சிங்களப் பேரினவாதமும் விதி விலக்கல்ல. எத்துணை நெருக்கடிகள், இன்னல்கள், பின்னடைவுகள் நேர்ந்தாலும் அந்தப் பேரினவாதத் திமிர் – வெறி – மமதை – தடிப்பு – அகம்பாவம் – மாறாது. அதை நாம் கண்கூடாக இப்போது பார்க்கிறோம்.

இந்தப் பேரினவாக மேலாண்மை வெறிப் பண்பியல்பு இந்த நெருக்கடிக்குள்ளும் எல்லாவற்றையும் மீறியும் தலை தூக்கவே செய்யும். அதைக் காண்கிறோம்.

நாடு பொருளாதார ரீதியில் மோசமான நிலையில் –அதலபாதாளத்தில் – விழுந்து கிடக்கின்றது. நிலைமை இன்னும் பாதிப்பான கட்டத்தை நோக்கி நகரும் என்று எல்லோரும் அஞ்சி நடுங்குகிறார்கள். மூன்று வேளை உணவைக் குறைத்து, மக்கள் பட்டினியை நோக்கித் தள்ளப்படும் சூழல். அடுத்த கட்டம் என்னவென்று தெரியாத இக்கட்டு.

ஒரு தேசமாக – நாடாக – ஒன்றுபட்டு எழுந்து, இந்தச் சிக்கல் நிலையை – பிரச்சினையை – எதிர்கொள்வதே ஒரே வழி என்பது எல்லோருக்கும் தெரிகின்றது. இனம், மதம், மொழி, சாதி என்று பிளவுண்டு, ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்கி, யுத்தம் புரிந்து, அட்டகாசம் பண்ணியதன் விளைவுதான் இது என்பதை உணர்ந்து திருந்த வேண்டும் எனப் பல தரப்புக்களிலும் வலியுறுத்தப்படுகின்றது.

இயற்கை நீதி, நியாயம், பொறுப்பு கூறல், மனித மாண்பு, சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை இனியாவது மதித்து, வீழ்ச்சியிலிருந்து எழுவோம் என்று ஓங்கிக் குரல் எழுப்பப்படுகின்றது.

புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் அத்தகைய பரஸ்பர புரிந்துணர்வுக்கும், ஒன்றுபட்ட இணக்கத்துக்குமான ஆரம்பப் படிதான். ஆனால் அதைக் கண்டதும் பௌத்த, சிங்களப் பேரினவாதம் தனது பரவணிப் பண்பியல்பைக் காட்டத் தொடங்கி விட்டது.

நாட்டின் இன்றைய இழி நிலைக்கு எந்தப் பேரினவாதம் காரணமோ, அதுவே நாடு மீண்டெழுவதைக் குழப்பவும் தலை பட்டுவிட்டது.

இப்போது புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கம் செய்யப்பட்டால், முன்னர் தடை விதிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தவறா என்று கேள்வி எழுப்புகின்றன இந்த பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி அமைப்புகள்.

நல்லது. கொரோனாத் தொற்றுக் காலத்தில் தொற்றில் உயிரிழந்த இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடலங்களைக் கூட, உலகில் எந்த நாட்டிலும் இல்லாத வகையில் பலவந்தமாகக் கைப்பற்றி எரிக்கும் நடவடிக்கையை பௌத்த, சிங்கள இனவெறி அரசு முன்னெடுத்தது. உலகளாவிய கண்டனங்களுக்கும் நெருக்குவாரங்களுக்கு மத்தியில் அந்தக் கீத்தரமான இழி செயலை உலக விஞ்ஞானிகள், நிபுணர்கள், ஆய்வாளர்கள் யாருமே அறியாத ஒரு கொள்கைப் போக்கில் நியாயப்படுத்தியது கொழும்பு. கடைசியாகப் பல தரப்புகளினதும் எதிர்ப்புகளினாலும் நெருக்குவாரங்களினாலும் அவ்விதிமுறையைக் கைவிட வேண்டிய கட்டாயம் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுக்கு நேர்ந்தது. அப்போது இப்படிக் கட்டாயமாக உடலைக் கைப்பற்றி எரிக்கும் முடிவு முன்னர் எடுக்கப் பட்டமையும், அது நடைமுறைப்படுத்தபட்டமையும் தவறா என்று இந்தப் பேரினவாதிகள் கேட்கவில்லை. இப்போது புலம்பெயர் அமைப்புகளுக்குத் தடை நீக்கப்படும் போது மாத்திரம் முன்னைய தடை பற்றி அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்

இந்தப் பேரினவாதம் நாட்டை மீள விடாது, அழித்தே தீரும் என்பது உறுதி.

# மின்சார கட்டணங்கள் அதிகரிப்பால் 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம்!

## நிஹால் வீரரட்ன தகவல்

மின்சார கட்டணங்களை உயர்த்துவதன் காரணமாக 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம் ஏற்படும் என இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மின்சார கட்டணங்கள் 75 வீதத்தால் உயர்த்தப்பட்டால் இலங்கை மின்சார சபைக்கு வருடாந்தம் 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம் ஏற்படும் என சபையின் பொருளியல் மூலோபாய பிரதிப் பொது முகாமையாளர் நிஹால் வீரரட்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

புதிய விலை திருத்தம் காரணமாக ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும்.

இலங்கை மின்சார சபையின் பணியாளர்களின் ஆண்டுக்கான வரப்பிரசாதங்கள் தொடர்பில் சபை தீர்மானிக்குமே தவிர, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானிக்க முடியாது. – என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அர்ஜுன ரணதுங்கவிடம் நட்ட ஈடு கோரியுள்ள இலங்கை கிரிக்கெட் குழு



இலங்கை கிரிக்கெட் குழு, தேசிய விளையாட்டு சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் அர்ஜுன ரணதுங்கவிடமிருந்து 200 கோடி ரூபாவை நட்டஈடாகக் கோரியுள்ளது.

திங்கட்கிழமை நடைபெற்ற இலங்கை கிரிக்கெட்டின் அவசர நிர்வாகக் குழு கூட்டத்தில், அர்ஜுன ரணதுங்க அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது பொய்யான, இழிவான மற்றும் திரிவுபடுத்தப்பட்ட விடயங்களைக் கூறினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இவை, இலங்கை கிரிக்கெட் அணியின் நன்மதிப்புக்கும் நற்பெயருக்கும் பாதிப்பை விளைவிக்கும் வகையில் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் கூறப்பட்ட கருத்துக்களாகும்.

எனவே ரணதுங்கவுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க, இந்தக் கூட்டத்தின் போது தீர்மானித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பொய்யான அறிக்கையின் மூலம் இலங்கை கிரிக்கெட் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட நற்பெயர் இழப்புகளுக்கு 200 கோடி ரூபா நட்டஈடாக வழங்க கோரி, செயற்குழு உறுப்பினர்கள் அர்ஜுன ரணதுங்கவுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

# 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இலங்கையை வந்தடைகின்றது!

இந்திய கடன் உதவியின் கீழ் மேலும் 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இந்த வாரத்துக்குள் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு கமர்ல் உர நிறுவனத்தின் பணிப்பாளர் மெத்சிறி குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மக்காச்சோளச் செய்கைக்காக இந்த உரத்தின் ஒரு பகுதி பிரித்து வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். பல்கலையின் பொறியியல் மாநாடு!

எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகர் பொறியியல் பீட வளாகத்தில் முதலாவது பொறியியல் மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் கலந்துகொண்டு தங்களது ஆய்வுகளைச் சமர்பிக்கவுள்ளனர் என பொறியியல் பீட பேராசிரியர் அ.அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல பல்கலைகழகங்களிருந்து வருகின்றவர்கள் மற்றும் மாணவர்கள் இதன் மூலம் பயனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இது ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகிறது. அதாவது தங்களது கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய ஒரு களமாக இந்த மாநாடு அமையவுள்ளது.

இதன் மூலம் இலங்கை மற்றும் சர்தேச அபிவிருத்திகளை ஒரு நிலைபேறான அபிவிருத்தியாகக் கொண்டுச்செல்லக் கூடியதாக இருக்கும் இந்த பொறியியல் மாநாடு பல தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவோடு இடம்பெறுகிறது.

யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் ஆராச்சியாளர்கள் மற்றும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, சீனா, கொங்கொங், உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து வருகின்ற ஆய்வாளர்களும் இதில் பங்குபற்றுகின்றார்கள்.



இந்தப் பொறியியல் ஆய்வு மாநாடு பல சமூகப் பிரச்சினைகளைப் பொறியியல் நோக்கோடு ஆய்வு செய்து அவற்றுக்குத் தீர்வுகளைக் காணவுள்ளனர்.

இதன் போது தெரிவு செய்யப்படுகின்ற சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படவுள்ளன. இதற்காக பல முன்னணி பல்கலைகழகங்கள், பேராசிரியர்கள் ஆகியோர் உதவி செய்துள்ளனர். – எனவும் தெரிவித்துள்ளார்.





# தலிபான் ஆட்சி ஓராண்டு பூர்த்தி வறுமையில் உழல்கிறது ஆப்கான்

காபூல்,ஓக.16

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைந்து ஓர் ஆண்டான நிலையில், அந்நாட்டில் நோயும், பசியும், துயரும் மட்டுமே நிறைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 15 இல் ஆப்கனில் ஆட்சியைப் பிடித்த தலிபான்கள், இஸ்லாமியர்களின் ரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அறிவித்தனர். இந்நிலையில், தங்களது ஓராண்டு ஆட்சி நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில், துப்பாக்கி ஏந்திய தலிபான்கள் தலைநகர்காபூல்தெருக்களில்மோட்டார்சைக்கிள்களில் நேற்று வலம் வந்தனர். அப்போது, 'இஸ்லாம் வாழ்க அமெரிக்காவுக்கு மரணம்' போன்ற கோஷங்களை முழங்கினர்.

தலிபான்களை உலக நாடுகள் புறக்கணித்தமையால்ஆப்கானிஸ்தானுக்குகிடைத்துவந்தபொருளாதார உதவிகள் தடைப்பட்டன. இதனால், அடிப்படை வசதிகளின்றி அந்நாடு கடும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

மேலும், பெண்களுக்கு கல்வி மற்றும் வேலைக்குச் செல்வதில் கடும் கட்டுப்பாடுகளை விதித்ததால், ஒரு வருடத்திற்குப் பிறகும், சிறுமிகள், டீன் ஏஜ் பெண்கள் இன்னும் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. மேலும், பெண்கள் பொது இடங்களில் தலை முதல் கால் வரை மூடி, தங்கள் கண்களை மட்டுமே காட்ட வேண்டும் போன்ற கட்டுப்பாடுகளால் நாட்டில் அசாதாரண சூழ் நிலை நிலவுகிறது.

அதே சமயம், அரசு வானொலி மற்றும் 'டிவி'க்களில் 'ஊழல் ஒழிப்பு, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் சாகுபடி போன்றவை தலிபான்களின் ஓராண்டு சாதனைகள்' எனத் தெரிவிக்கப்பட்டது.

# மியான்மரில் ஆங் சான் சூகிக்கு மேலும் ஆறு ஆண்டுகள் சிறை!




யாங்கூன்,ஓக.26

ஊழல் வழக்குகளில் மியான்மர் முன்னாள் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகிக்கு மேலும் 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடியவரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கூட்டணி கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது. அரசின் ஆலோசகராக சூகி பொறுப்பு வகித்தார்.

எனினும், தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறி கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு இராணுவம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியது. சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இராணுவத்துக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டியமை, அலுவல் ரீதியான சட்டங்களை மீறியமை, ஊழலில் ஈடுபட்டமை என ஆங் சான் சூகி மீது 11 வழக்குகள் தொடரப்பட்டன. இதுதொடர்பான விசாரணை மியான்மர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சியை தூண்டியது, கரோனா விதிகளை மீறியது ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு கடந்த டிசம்பர் மாதம் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து மியான்மர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் ஆங் சான் சூகிக்கு எதிரான சில ஊழல் வழக்குகள் மீது விசாரணை நடைபெற்று வந்தது. இதில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி ஆங் சான் சூகிக்கு மேலும் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக நீதித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஊழல் வழக்குகளின் விசாரணை மூடப்பட்ட அறைக்குள் நடைபெற்றதாகவும், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், ஆங் சான் சூகி வழக்கறிஞர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் சூகியின் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று மொத்தம் 4 வழக்குகளில் அவருக்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்தை விலையை விடக்குறைவாக அரசு நிலத்தை பொதுமக்களுக்கு வாடகைக்கு விட்டது, அறக்கட்டளைக்கு கொடுத்த நிதியை பயன்படுத்தி வீடு கட்டிக் கொண்டது உள்ளிட்ட வழக்குகள் அவர் மீது தொடுக்கப்பட்டிருந்தன.

4 வழக்குகளில் தலா 3 ஆண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 3 வழக்குகளில் பெற்ற தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் நான்காவது வழக்கில் பெற்ற தண்டனையை அதைத் தொடர்ந்த காலத்தில் அவர் அனுபவிக்க வேண்டும்என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் கூடுதலாக 6 ஆண்டு சிறைத் தண்டனையை பெற்றுள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளை ஆங் சான் சூகி மறுத்துள்ளார். தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவுள்ளதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

# தைவானைச் சூழ்ந்து போர்ப் பதற்றம் சுற்றிவளைத்துச் சீனா யுத்த ஒத்திகை

## மீண்டும் நெருக்கடி முற்றியது



தைபே,ஓக.16

அமெரிக்க எம்.பி.க்கள் குழு தைவான் சென்றுள்ளமையால் கோபமடைந்துள்ள சீனா, தைவானை சுற்றி மீண்டும் போர்ப்பயிற்சியில் ஈடுபடுகிறது.

சீனாவிடம் இருந்து பிரிந்து தனிநாடாக உருவெடுத்த தைவானுக்கு அமெரிக்கா பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது. இது, தைவானைத் தங்கள் நாட்டின் ஒரு பகுதி எனச் சொந்தம் கொண்டாடி வரும் சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்தச் சூழலில் சீனாவின் கடும் எதிர்ப்பைப் புறம் தள்ளிவிட்டு அமெரிக்க சபாநாயகர் நான்சிபெலோசி கடந்த 2 ஆம் திகதி தைவான் சென்றார். இதில் ஆத்திரமடைந்த சீனா, தைவானை நாலாபுறமும் சுற்றி வளைத்து கடல் மற்றும் வான்வெளியில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது. இதானல் தைவான் – சீனா இடையே போர் பதற்றம் உச்சத்தை எட்டியது. இந்நிலையில் கடந்த 11 ஆம் திகதி சீனா பயிற்சியை நிறைவு செய்தது.

இந்த நிலையில் இந்த பதற்றத்துக்கு மத்தியில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேரை கொண்ட பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் தைவான் சென்றது. இந்த குழு நேற்று தைவான் அதிபர் சாய் இங் வென்னை சந்தித்துப் பேச்சு நடத்தியது. இது சீனாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சீன இராணுவம் தைவானைச் சுற்றி மீண்டும் போர்ப்பயிற்சியை தொடங்கியுள்ளது.

இது தொடர்பில் சீன ராணுவம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், தைவான் தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் வான்வெளியில் போர் தயார்நிலை ரோந்து மற்றும் போர் பயிற்சிகள் திங்கட்கிழமை தொடங்கியுள்ளன. இது, தைவான் ஜலசந்தியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை குறைமதிப்புக்கு உட்படுத்தும் அமெரிக்கா மற்றும் தைவானுக்கு எதிரான ஒரு கடுமையான தடுப்பு நடவடிக்கையாகும் என கூறப்பட்டுள்ளது.

# ஸ்கொட்லாந்தில் பெண்களுக்கு மாதவிடாய் 'நப்கின்' இலவசம்!

எடின்பர்க்,ஓக.16

உலகிலேயே முதல் முறையாக, மாதவிடாய் தயாரிப்புகள் பிரேரணை ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தில் கடந்த 2020 நவம்பரில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது

இந்நிலையில், ஸ்கொட்லாந்து அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில், மாதவிடாய்ப் பொருள்கள் தேவைப்படும் அனைவருக்கும் கவுன்ஸில்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அவற்றை இலவசமாக கிடைக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள கழிவறைகளில் சுகாதாரப் பொருள்களை இலவசமாக வைத்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக நீதி செயலர் ஷோனா ராபின்சன் கூறும்போது, அனைத்து பெண்களுக்கும் 'நாப்கின்கள்' உட்பட மாதவிடாய் பொருள்களை இலவசமாக வழங்க முடிவெடுத்திருப்பது சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதாக உள்ளது. மேலும், பெண்களுக்கு இந்த பொருள்களை அணுகுவதில் உள்ள நிதி சார்ந்த தடைகளையும் இது அகற்றும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# சென்னை வங்கியில் கொள்ளையிடப்பட்ட 32 கிலோ நகையில் 18 கிலோ உடன் மீட்பு

## 72 மணி நேரத்துக்குள் பிரதான சூத்திரதாரி சிக்கினார்


பிடிபட்ட ஜிம் முருகன் இவர்தான்




சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தனியார் வங்கியின் நகைக்கடன் கிளையில் கடந்த சனிக்கிழமை 32 கிலோ தங்க நகைகளை கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில், முக்கிய சந்தேக நபரான முருகன் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து இதுவரை 18 கிலோ நகைகள் மீட்கப்பட்டுள்ளன என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நகையைக் கொள்ளையடித்தவர்கள் எனச் சொல்லப்படும் நபர்கள் பற்றிய சி.சி.டி.வி. காட்சிகள் கண்டறியப்பட்டமையால், 72 மணி நேரத்தில் அவர்களைக் கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள முருகனின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் என 15 நபர்களிடம் நான்கு தனிப்படையினர் விசாரணை நடத்தினர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னதாக, கடந்த சனிக்கிழமை, இன்னொரு தனியார் வங்கி ஊழியரான முருகன், தன்னுடன் இரு நபர்களை அழைத்து வந்து வங்கி மேலாளர் மற்றும் பிற அலுவலர்களை மிரட்டி நகைகளை கொள்ளையடித்தார் என விசாரணையில் தெரிய வந்ததாக காவல்துறையினர் கூறினர்.

நகைகளைச் சூறையாட முருகன் மற்றும் அவரது நண்பர்கள் திட்டமிட்டனர் எனவும் இதற்காக வங்கியின் பாதுகாவலருக்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு, அவர் மயங்கியதும் பிற ஊழியர்களை கத்திமுனையில் மிரட்டி கட்டிப்போட்டு விட்டு நகைகளை கொள்ளைக் கும்பல் அள்ளிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தால் வங்கிக் கிளையில் தங்களுடைய நகைகளை அடமானம் வைத்த வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பலரும் அந்த வங்கியை முற்றுகையிட்டு தங்களுடைய நகையின் நிலையை கேட்டறிய வந்திருந்தனர்.

இந்த நிலையில், நகைகடன் வங்கிக் கிளையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளமையால் அவற்றை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## 15 ஆயிரம் சைக்கிள்கள் அன்பளிப்பு மடகஸ்கருக்கு இந்தியா வழங்கியது





இந்திய சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, மடகாஸ்கர் நாட்டிற்கு இந்தியா 15 ஆயிரம் சைக்கிள்களை நன்கொடையாக வழங்கியது.

நேற்று இந்தியா முழுவதும் சுதந்திர தின பவள விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்நிலையில் நட்பு நாடான மடகாஸ்கருக்கு 15 ஆயிரம் சைக்கிள்களை நன்கொடையாக இந்தியா வழங்கியுள்ளது.

இந்தியா அனுப்பி வைத்த சைக்கிள்களை மடகாஸ்கர் பிரதமர் கிறிஸ்டியன் என்ட்சே, மடகாஸ்கர் நாட்டிற்கான இந்திய தூதர் அபய் குமார் இருவரும் சவாரி செய்து மகிழ்ந்தனர். இதன் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளது.

முன்னதாக இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, மடகாஸ்கர் தலைநகர் அண்டனானரிவோவில் இந்தியத் தூதரக கட்டடம் இந்திய மூவர்ண விளக்குகளால் ஜொலித்தது. அங்கு இந்திய தூதர் அபய் குமார் தேசியக்கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## பதின்மூன்று தங்கச் சுரங்கங்களை ஏலத்தில் விற்கின்றது இந்திய அரசு

புதுடில்லி,ஓக.16

இந்திய மத்திய அரசு, மொத்தம் 13 தங்கச் சுரங்கங்களை, வரும் நாள்களில் எலத்தில் விற்பனை செய்யத் திட்டமிட்டு உள்ளது.

இந்தச் சுரங்கங்கள் ஆந்திர பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளன.

ஆந்திர பிரதேசத்தில் மொத்தம் பத்து சுரங்கங்கள் ஏலத்தில் விடப்பட உள்ளன. இவற்றில் ஐந்து சுரங்கங்கள், இம்மாதம் 26 ஆம் திகதியன்று ஏலத்தில் விடப்பட உள்ளன.



மீதி ஐந்து சுரங்கங்களை, இம்மாதம் 29 ஆம் திகதியன்று ஏலம் விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு, கடந்த மார்ச் மாதத் திலேயே விடப்பட்டு விட்டது.

மீதம் உள்ள மூன்று சுரங்கங்களுக்கான ஏலம், எப்போது நடைபெறும் என்பது குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இந்த மூன்று சுரங்கங்களுக்கான ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு கடந்த மே 21 ஆம் திகதியன்று வழங்கப்பட்டது.

கடந்த நிதியாண்டில் மட்டும் பல்வேறு தாதுக்களுக்கான மொத்தம் 45 சுரங்கங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## முதாலாம்,இரண்டாம் வகுப்புகளில் வீட்டுப் பாடம் வழங்குவதற்குத் தடை

முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு வீட்டுப்பாடம் தரக்கூடாது என பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு வீட்டுப்பாடம் கொடுக்கக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதனை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை இன்று உத்தரவிட்டுள்ளது.



வீட்டுப்பாடம் தரப்படுவதில்லை என்பதை பறக்கும்படையினர் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும் என்று முதன்மை கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆய்வுக்கு பின் வீட்டுப்பாடம் தரப் பட்டதா,இல்லையா என்ற அறிக்கையை சமர்ப்பிக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று நீர்க் குழாய்களில் கறை படிந்த செந்நீர் விநியோகம்!

அக்கரைப்பற்று பிராந்திய நீர் வழங்கல் காரியாலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் சனிக்கிழமை மாலை வரை அப்பகுதி நீர்ப் பாவனையாளர்களுக்கு குழாய் விநியோகத்தில் வழங்கப்பட்ட கறை படிந்த சிவப்பு நிற நீரினால் பல்லாயிரக்கணக்கான நீர்ப் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

அம்பாறை கொண்டவட்டுவான் நீர் சுத்திகரிப்புநிலையத்திலிருந்து அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டங்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரே கறை படிந்து பாவிக்க முடியாத வகையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டு, செய்வதறியாது குடிப்பதற்கோ தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாமல் திண்டாடினார்கள்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் தற்போது முற்று முழுதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீரை நம்பியே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற இந்த நீர் விநியோகம் பொது மக்களுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் பல இலட்சக் கணக்கான லீற்றர் நீர் பாதைகளிலும், இருப்பிடங்களிலும் திறந்து விடப்பட்டது. இது பொதுமக்களின் நீர் கணக்குகளிலேயே கழிக்கப்படவுள்ளது.

இந்தச் சீர்கேடு குறித்து உடனடியாக விசாரணை செய்து, நீர்ப்பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு, உரிய அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# ஆயதக்குழு முகாமாகச் செயற்பட்ட வீட்டின் கூரையில் கைக்குண்டுகள்

## ஏறாவூரில் அதிரடிப்படை மீட்டது



மட்டக்களப்பு – ஏறாவூர் பிரதேசத்தில் முன்னர் ஆயுதக்குழு முகாமாக இருந்த வீடு ஒன்றின் கூரை அண்ட சீற்றின் மேல் இருந்து கைக்குண்டுகள் இரண்டை, விசேட அதிரடிப்படையினர் கடந்த சனியன்று மீட்டு, செயலிழக்கச் செய்தனர் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவிலுள்ள 5ஆம் பிரிவு தொம்புதர் வீதியில் இருக்கும் வீடு ஒன்றின் உரிமையாளர், வெளிநாட்டில் குடும்பமாக இருந்துள்ள நிலையில் இந்த வீட்டை 2006 ஆம் ஆண்டு ஆயுதக் குழு ஒன்று கைப்பற்றி, அவ்வீட்டில் முகாமிட்டிருந்தது.

இந்த நிலையில், வீட்டு உரிமையாளர் 2007ஆம் ஆண்டு திரும்பி வந்தபோது அதில் ஆயுதக் குழு முகாம் அமைத்துள்ளதையடுத்து பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்து, அந்த வீட்டில் இருந்து ஆயதக் குழுவை வெளியேற்றி, வீட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வீட்டின் உரிமையாளர், தற்போது அந்த வீட்டில் வாழ்ந்து வருகிறார். தற்போது வீட்டைப் புனர்நிர்மாணம் செய்துவரும் நிலையில் கடந்த வாரம் கூரையின் ஓடுகளை மாற்ற முற்பட்டார். அப்போது அண்டசீற்றில் இரு கைக்குண்டுகள் இருக்கின்றமையைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தாண்டியடி விசேட அதிரடிப் படை முகாம் குண்டு செயலிழக்கும் பிரிவு, நீதிமன்ற உத்தரவைப் பெற்று, அந்த இரண்டு குண்டுகளையும் சனியன்று மீட்டு செங்கலடி கறுத்தப்பாலம் அருகில் கொண்டு சென்று, செயலிழக்கச் செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இளைஞர்களின் பிரச்சினைகள்; திருமலையில் கலந்துரையாடல்





(ஹஸ்பர்)

இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான வழிகாட்டல் கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் டாக்டர்.திரு.என். ரவிச்சந்திரன் தலைமையில் திருகோணமலை சர்வோதய நிலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் அவர்களின் நெறிப்படுத்தலில் இருபது பேர் வரைக் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் மூவின சமூகத்தையும் சார்ந்த புத்திஜீவிகள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள் பிரதேச சபை உறுப்பினர் எனப் பலரும் பங்குபற்றினர்.

இச்செயலமர்வு இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இளைஞர் திட்ட பிரிவு மற்றும் மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

# நான்கு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கு கிழக்கில் விண்ணப்பம் கோரல்

(காரைதீவு நிருபர் சகா)

மட்டக்களப்பு, ஒக. 16

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடமாக உள்ள நான்கு வலயங்களுக்கான வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா மற்றும் மட்டக்களப்பு மத்திய வலயங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் வலயங்களுக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் வரும் 12 ஆம் திகததியாகும்.

மேலதிக விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் கிழக்கு மாகாண சபையின் www ep.gov.lk என்ற இணையதளத்தில் பிரவேசித்து ministry of education என்ற பக்கத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ டபிள்யூ ஜி. திசாநாயக்க தெரிவித்தார்.

# காரைதீவு பிரதான வீதியில் விபுலானந்தர் சிலை திறப்பு







சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் திருவுருவப் படங்கள் தாங்கி மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

(காரைதீவு நிருபர் சகா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மற்றுமொரு சிலை, அவர் அவதரித்த காரைதீவில் பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் மார்பளவிலான சிலையை மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன், உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டு தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில், சுவேளையில் திறந்து வைத்தார்.

சுவாமிகளின் 'வெள்ளை நிற மல்லிகையோ..' என்ற பாடல் இசைக்க, அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இது, சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் ஐந்தாவது சிலையாகும். இச்சிலையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் வழங்கி இருந்தார்.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், திருக்கோவில் வலயப் பிரதிக் கல்வி பணிப்பாளர் சோ.ஸூரநுதன், சம்மாந்துறைவலயஉதவிக்கல்விப்பணிப்பாளர்வி.ரி.சகாதேவ ராஜா ஆகியோரா் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய கால்பந்து கூட்டமைப்பின் உரிமத்தை ரத்துச் செய்தது பிபா




*17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக்கிண்ண கால்பந்து போட்டித் தொடர் வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, 30 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கிண்ண மகளிர் கால்பந்தாட்டத் தொடர், முதல் முறையாக இந்தியாவிலும் நடைபெறவுள்ள நிலையில், இந்திய கால்பந்துக் கூட்டமைப்பின் உரிமத்தை பிபா தற்காலிகமாக ரத்துச் செய்துள்ளது.*

*இந்தியக் கால்பந்து கூட்டமைப்பில் தேர்தலை நடாத்தி புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படாததால் பிபா அங்கத்துவத்துக்கான உரிமம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டால் மீண்டும் உரிமம் வழங்கப்படும் என பிபா அறிவித்துள்ளது. மேலும், வரும் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவிருந்த மகளிர் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரையும் இடமாற்றம் செய்ய பிபா முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.*

# பிபா உலகக் கிண்ணக் கால்பந்தாட்டம் நவம்பர் 20 இல் ஆரம்பமாகவுள்ளது

FIFA WORLD CUP Qatar2022

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| QATAR | ENGLAND | ARGENTINA | FRANCE |
| ECUADOR | IRAN | SAUDI ARABIA | AUSTRALIA |
| SENEGAL | UNITED STATES | MEXICO | DENMARK |
| NETHERLANDS | WALES | POLAND | TUNISIA |
| **GROUP E** | **GROUP F** | **GROUP G** | **GROUP H** |
| SPAIN | BELGIUM | BRAZIL | PORTUGAL |
| COSTA RICA | CANADA | SERBIA | GHANA |
| GERMANY | MOROCCO | SWITZERLAND | URUGUAY |
| JAPAN | CROATIA | CAMEROON | SOUTH KOREA |

MARCA

32 அணிகள் பங்கேற்கின்ற 22 ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் நவம்பர் 20ஆம் திகதிமுதல் கட்டாரில் நடைபெறவிருக்கிறது. இந்தப் போட்டித் தொடருக்குத் தகுதி பெற்றுள்ள அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் கட்டார், ஈக்வடோர், செனகல், நெதர்லாந்து அணிகளும், பி பிரிவில் இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேல்ஸ் அணிகளும், சி பிரிவில் ஆஜென்ரீனா, சவுதி அரேபியா, மெக்சிகோ, போலந்து நாடுகளும், டி பிரிவில் நடப்பு சம்பியனான பிரான்ஸ், டென்மார்க், துனிசியா, ஆஸ்திரேலியா ஆகியவையும், இ பிரிவில் முன்னாள் சம்பியன்களான ஸ்பெயின், ஜெர்மனி மற்றும் ஜப்பான், கோஸ்டாரிகா அணிகளும், எவ்பிரிவில்பெல்ஜியம், கனடா, மொராக்கோ, குரோஷியா ஆகியவையும், ஜி பிரிவில் பிரேசில், செர்பியா, சுவிட்சர்லாந்து, கமரூன் அணிகளும், எச் பிரிவில் போர்த்துக்கல், கானா, உருகுவே, தென் கொரியா ஆகிய அணிகளும் இடம் பிடித்துள்ளன.

இம்முறை உலகக் கிண்ணத் தொடரை நடத்துகின்ற கட்டார் அணியும் ஈக்வடோர் அணியும் தொடரின் முதலாவது போட்டியில் நவம்பர் 20 ஆம் விளையாடவுள்ளதாக பிபா தெரிவித்துள்ளது.

# சிம்பாப்வே அணியுடனான தொடரிலிருந்து வாஷிங்டன் சுந்தர் காயத்தால் விலகல்




சிம்பாப்வே சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள்தொடரில்விளையாடவிருக்கிறது. முதலாவது ஒரு நாள் போட்டி வரும் 18 ஆம்திகதிஹராரேயில்நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் ஹராரே சென்றடைந்த இந்திய வீரர்கள் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர். இந்த ஒருநாள் தொடரில் இந்திய அணிக்கு கே.எல்.ராகுல் தலைவராகவும், ஷிகர் தவான் துணைத்தலைவராகவும் செயற்படுவர் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது. இந்த தொடரில் ரோகித் சர்மா, விராட் கோலி, பும்ரா, ரிப் பன்ட் உள்ளிட்ட முன்னணி இந்திய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்தத்தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றிருந்த சகலதுறை வீரரான வாஷிங்டன் சுந்தர் தோளில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகியுள்ளார். மன்செஸ்டரில் நடைபெற்ற இங்கிலாந்து கழக அணிகளுக்கிடையிலான ரோயல் லண்டன் ஒருநாள் தொடரின் போட்டியொன்றின்போது வாஷிங்டன் சுந்தருக்கு இடது தோளில் பலமாக காயம் ஏற்பட்டது. அது குணமாவதற்கு சில வாரங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருக்குப் பிறகு வாஷிங்டன் சுந்தர் ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணியில் இடம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்காவது ரி-20 போட்டியில் அதுபாரமாக வென்று அயர்லாந்துத் தொடரை சமன்செய்த ஆப்கானிஸ்தான்



அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடிவருகிறது. தொடரின் முதலாவது, இரண்டாவது போட்டிகளில் அயர்லாந்தும் மூன்றாவது போட்டியில் ஆப்கானிஸ்தானும் வெற்றி பெற்றன.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ரி-20 போட்டி நேற்று பெல்பாஸ்டில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. மழை காரணமாக அணிக்கு தலா 11 ஓவர்களுக்கு போட்டி அளவு குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 11 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்களைச் சேர்த்தது. நஜிபுல்லா அரைச் சதமடித்தார். கடைசி ஓவர்களில் அதிரடி காட்டிய ரஷிட்கான் 10 பந்துகளில் 3 சிக்சர்கள், ஒரு பவுண்டரி உள்பட 31 ஓட்டங்களைக் குவித்தார்.

இதையடுத்து, 133 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து அணியால் 11 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 105 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிய, ஆப்கானிஸ்தான் அணி இந்தப் போட்டியில் 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. டொக்ரெல் அதிகபட்சமாக 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலிருந்தார், பொல் ஸ்ட்ரில்லிங் 20 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆப்கானின் பந்து வீச்சில், பரீட் அகமட் 3 விக்கெட்களையும், ரஷிட் கானும் நவீட் உல் ஹக்கும் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். ரஷிட் கான் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

இந்தப் போட்டியையடுத்து ரி-20 தொடரில் இரு அணிகளும் 2-2 என சமனிலை வகிக்கின்றன. தொடரின் வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நாளை 17ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தொழில்நுட்ப புரட்சி அவசியம்!



## சஜித் வற்புறுத்து

நிலவும் பொருளாதார மந்தநிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்து துறைகளிலும் தொழில்நுட்ப முன்னேற்றம் நிகழ வேண்டும் எனவும், அது இந்நாட்டின் பாடசாலைக் கட்ட மைப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியால் நாட்டில் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்துவதாகவும், இதன் மூலம் ஒவ்வொரு துறையையும் மேம்படுத்தி, நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்நேரத்தில், நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் நிலமை ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டது 80 களின் பிற்பகுதி மற்றும் 90 களின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தை ஆரம்பித்தார் எனவும், ஆனால் அதன் பின்னர் உருவான தலைவர்கள் குறுகிய அரசியல் நோக்கத்துடன் அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை எனவும், ஏதோ ஒரு வகையில் ஏற்றுமதி சார்ந்த ஆடைத் தொழில் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டிருந்தால், இன்று நாம் எதிர்நோக்கும் பொருளாதார மந்தநிலையி லிருந்து இலகுவாக விடுபட்டிருக்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டம் பெல்மடுல்ல தொகுதிக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெல்மடுல்ல தொகுதி அமைப்பாளரான சட்டத்தரணி சமித ஆடிகல இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமையோடு ஏராளமான பிரதேச மக்களும் இதில் பங்கேற்றனர்.

## 14 நாள்களாக மூடப்பட்டுள்ளது வீதி 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

மஸ்கெலிய பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா - நல்லத்தண்ணீர் பிரதான போக்குவரத்து வீதி கடந்த 14 நாள்களாகத் தொடர்ந்து மூடப் பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி பெய்த மழை காரணமாக மஸ்கெலிய - நல்லத்தண்ணீர் பிரதான வீதி மோகினி எல்லைப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இந்தப் பாதை முழுமையாக மண்ணால் நிரம்பியுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் இந்த மண்மேட்டின் ஊடாக நடந்து பயணிப்பதும் மிகவும் ஆபத்தானதாகக் காணப்படுகின்றது.

இதனால் மேற்படி பகுதியில் வாழும் பாட சாலை மாணவர்கள் உட்பட சுமார் 15 ஆயிரத் துக்கும் மேற்பட்ட மக்கள் பெரும் சவாலை எதிர் நோக்கியுள்ளனர். அதுமட்டுமில்லாமல் தொடர்ந்தும் இந்த பகுதிகளில் மண்சரிவு அபாயமும் காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நுரைச்சோலை மின் உற்பத்தித் தொகுதியை சீரமைப்பதற்கு 14 முதல் 16 நாள்கள் ஆகும்!

### இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தி தொகுதியொன்று செயலிழந்துள்ளதன் காரணமாக இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் மின்வெட்டு நீடிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை மின்னுற்பத்தி தொகுதியை சீரமைக்க குறைந்தது 14 முதல் 16 நாள்கள் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கை வங்கி தலைவரின் ஊழல் செயற்பாட்டுக்கு எதிராக போராட்டம்!

இலங்கை வங்கி தலைவரின் சட்டத்துக்கு முரணான ஊழல் செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தியும் அவரின் ஊழல் செயற்பாடுகளை அம்பலப்படுத்திய ஊழியர் சங்கத்தின் தோழர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தினரால், இலங்கை வங்கியின் பிரதான கட்டடத்துக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி போராட்டத்துக்கு டீ.எப்.சி.சி வங்கி, கொமர்சல் வங்கி மற்றும் ஏனைய வங்கியை சார்ந்தவர்களும் வருகை தந்து ஆதரவை வழங்கியுள்ளனர்.

# யாழில் பலரையும் வியக்கவைத்த பூப்புப்புனித மங்கள நீராட்டு விழா!







யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்ற பூப்புப்புனித நீராட்டு விழாவொன்று பலரையும் வியக்க வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியின் பூநாறி மடத்தடியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பூப் புப்புனித நீராட்டு விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவிற்காக, வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவில் பகுதியில் இருந்து நிகழ்வு மண்டபம் வரை காங்கேசன்துறை வீதி வழியாக யானை, குதிரை வண்டில், கதகளி, மேளதாள வாத்தியங்கள், சகிதம் பெண் மற் றும் அவரது உறவினர்கள் பவனியாக மண்டபம் வரை அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்விற்கு தென்பகுதியில் இருந்து யானை மற் றும் கதகளி கலைஞர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். இந்நிலையில் அதனைக் காண்பதற்காக பெருமளவு மக்கள் ஒன்றுகூடினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2022இல் வெளியிடப்பெற்றது.